**பிரஸார் பாரதி**
**அகில இந்திய வானொலி, சென்னை**

**20 10 2025** | **MONDAY** | **6.30 PM**

# மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் வளர்ச்சி 140 கோடி மக்களின் கனவுகளை நனவாக்கும் வகையில் அமைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. பண்டிகை கால சிறப்பு ரயில் இயக்கம் குறித்து ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இன்று ஆய்வு செய்தார்.
3. வடகிழக்கு பருவமழை காலத்தில் தண்ணீர் தேங்குவதை தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு துரைமுருகன் தெரிவித்துள்ளார்.
4. மேட்டூர் அணை நடப்பாண்டு 7-ஆவது முறையாக முழு கொள்ளளவான 120 அடியை இன்று எட்டியது.
5. தமிழகம் மற்றும் புதுவையில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## இனி விரிவான செய்திகள் ----

நாட்டின் வளர்ச்சி, 140 கோடி மக்களின் கனவுகளை நனவாக்கும் வகையில் அமைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கோவாவில் இன்று ஐ என் எஸ் விக்ராந்த் கப்பலில் தீபாவளி பண்டிகையை கடற்படை வீரர்களுடன் கொண்டாடிய பிரதமர், விண்ணைத்தொடும் அளவுக்கு எண்ணிப்பார்க்க முடியாத அளவு சாதனைகளை இந்தியா படைத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டை கட்டமைப்பதிலும், பாதுகாப்பதிலும் முப்படைகளின் பங்கு மகத்தானது என்று குறிப்பிட்ட அவர், இந்திய படையினரின் வீரமும், தியாகமும், துணிச்சலான செயல்பாடும் வரையறுக்க முடியாதவை என்று கூறினார்.

மலை உச்சியில் பாதுகாப்புக்காக நிற்கும் நம் வீரர்கள், நாட்டின் அசைக்க முடியாத தூணாகவும், அரணாகவும் விளங்குவதாக அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு தீவிரவாதத்தை ஒடுக்குவதில், நாம் வெற்றிகொண்டுள்ளதாக கூறிய பிரதமர், கடந்த 2014-ஆம் ஆண்டு 125 மாவட்டங்கள் நக்சல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், ஆனால் அந்த எண்ணிக்கை தற்போது 11-ஆக குறைந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

நூற்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்கள் தீவிரவாதத்தின் பிடியில் இருந்து விடுபட்டு, சுதந்திரமாக தீபாவளி பண்டிகையை இன்று கொண்டாடுவதாகவும் அவர் கூறினார்.

பல தலைமுறைகளாக பின்தங்கியிருந்த அந்த மக்கள் தற்போது நாட்டின் வளர்ச்சிப்பாதையில் முன்னேறி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர்கள் வசிக்கும் பகுதிகளில் சாலை வசதி, பள்ளிகள், மருத்துவமனைகள், செல்போன் கோபுரங்கள், நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களின் வாழ்வாதாரத்தை பெருக்க புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் பிரதமர் கூறினார்.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகள் கொண்டுவரப்பட்டதையடுத்து, மக்களின் வாங்கும் திறன் அதிகரித்துள்ளதாகவும், தங்களுக்கு தேவையான பொருட்களை தாராளமாக வாங்க முடிவதாகவும் அவர் தெரிவித்தார்.

சுதேசி என்ற மந்திர முழக்கத்தை மக்கள் அனுபவ ரீதியாக பெற்று வருவதாகவும் பிரதமர் கூறினார்.

<<<<<>>>>>

*ரயில்வே வாரியத்தின் ஒருங்கிணைந்த கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறையை ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இன்று பார்வையிட்டார்.*

*பண்டிகை காலத்தில் நாடு முழுவதும் இயக்கப்பட்டுவரும், பல்வேறு ரயில்கள் குறித்து அவர் கேட்டறிந்தார்.*

*முக்கிய ரயில் நிலையங்களை கட்டுப்பாட்டு அறையில் இருந்தவாறே அவர் பார்வையிட்டார்.*

*தீபாவளி, சாத் பூஜா பண்டிகை காலங்களில் மக்கள் சிரமமின்றி பயணம் செய்வதற்கு ஏதுவாக 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள், அமைச்சர்கள் தெரிவித்தனர்.*

*பயணிகளின் தேவையை பொறுத்து கூடுதலான ரயில்களை இயக்கவும் ரயில்வே நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*பண்டிகை காலத்தில் மக்கள் நலனை கருத்தில்கொண்டு 24 மணிநேரமும் பணியாற்றிவரும் ரயில்வே ஊழியர்களுக்கு அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தீபாவளி வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்தார்.*

<<<<<<>>>>>

*தூய்மையான, விபத்தில்லாத பசுமை தீபாவளி கொண்டாடும் இயக்கத்தை மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*முன்னோடி இயக்கமாக புதுதில்லியில் தொடங்கப்பட்டுள்ள பசுமை தீபாவளி பிரச்சாரத்தில் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்.*

*சுற்றுச்சூழலை உறுதி செய்யும் Life இயக்கத்தின் ஒரு பகுதியாக பசுமை தீபாவளி இயக்கமும் இன்று கடைபிடிக்கப்பட்டது.*

<<<<<<>>>>>

*சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக, பல்வேறு பொருட்களின் விலை கணிசமாக குறைந்துள்ளது.*

*திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் பகுதியில் கட்டுமானத் தொழிலை மேற்கொண்டுவரும் பயனாளி, கம்பி உள்ளிட்ட கட்டுமானப் பொருட்கள் விலை குறைந்துள்ளதை வரவேற்பதாக தெரிவித்துள்ளார்.*

<<<<<<>>>>>

*தமிழகத்தில் வடகிழக்கு பருவமழையையொட்டி அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் கூறியுள்ளார்.*

*வேலூர் மாவட்டம் காட்பாடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மழை நீர் தேங்கக்கூடிய அனைத்துப்பகுதிகளிலும் அதிகாரிகளுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாகவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு அவர்களுக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.*

*தேங்கும் மழைநீரை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்று அவர்களிடம் அறிவுறுத்தினார்.*

*வடகிழக்கு பருவமழை காலத்தில் எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் வகையில் மாநில அரசு தயாராக உள்ளதாகவும் திரு துரைமுருகன் தெரிவித்தார்.*

<<<<<<>>>>

*மேட்டூர் அணை நடப்பாண்டில் 7-ஆவது முறையாக அதன் முழுகொள்ளவான 120 அடியை இன்று எட்டியது.*

*இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.*

<<<<<<>>>>>

*தமிழக எல்லைப்பகுதியில் அமைந்துள்ள ஒகேனக்கலுக்கு வரும் காவிரி நீரும் அதிகரித்து வருகிறது.*
*பிற்பகல் 3 மணி நிலவரப்படி ஒகேனக்கலுக்கு வரும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 20 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.*

*காவிரியில் தண்ணீரின் அளவை மத்திய நீர்வள ஆணையத்தின் அதிகாரிகள், தமிழக எல்லையான பிலிகுண்டுலுவில் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.*

*தேனி மாவட்டம் வைகை அணையின் நீர்மட்டம் இன்று 69 அடியை எட்டியது. இதனிடையே, வினாடிக்கு ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் வைகை ஆற்றிலிருந்து திறக்கப்பட்டுள்ளது.*

*தேனி, மதுரை, திண்டுக்கல், ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வைகை அணையின் கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் ஆற்றில் இறங்கவோ, கடக்கவோ, குளிக்கவோ கூடாது என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.*

*<<<<<<>>>>>*

*தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு இடியுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.*

*<<<<<<>>>>>*

***<u>மாவட்டச் செய்திகள்</u>***

*சென்னை விமான நிலையத்தில் பயணிகளை கவரும் வகையில் அனைத்து முனையங்களிலும் 3-D திரையில் தீபாவளி வாழ்த்து தெரிவிக்கப்படுகிறது.*

---------

*செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் ஹாலந்து நாட்டு சுற்றுலா பயணிகள் ஹேப்பி தீபாவளி என கோஷம் எழுப்பி பட்டாசு வெடித்து மகிழ்ச்சியுடன் தீபாவளி கொண்டாடினர்*

---------------

*மேட்டுப்பாளையம் உதகை மலைரயில் பாதையில் கனமழை காரணமாக மண்சரிவு ஏற்பட்டுள்ளதால், மலை ரயில் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டுள்ளது.*

------------

*திருப்பூர் மாவட்டம் காங்கேயம் அருகே இருசக்கர வாகனங்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.*

*<<<<<<>>>>>*

***<u>விளையாட்டுச் செய்தி</u>***

*உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் வெற்றிபெற 203 ரன் என்ற இலக்கை, இலங்கை அணி நிர்ணயித்துள்ளது.*
*மும்பையில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த இலங்கை அணி 48 புள்ளி நான்கு ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 202 ரன் எடுத்தது.*

*<<<<<<END>>>>>*